# அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006

## மேல்நிலைத் தேர்வு, மார்ச் 2013

## தனித்தேர்வர் அனுமதி

## அறிவுரைகள்

மார்ச் 2013–ல் நடைபெறவுள்ள மேல்நிலைத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்–லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தனித்தேர்வர்கள் www.dge.tn.nic.in என்ற இணையதளத்திற்குச் சென்று, அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி, விவரங்களைபூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | தேர்வுக்கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் |
|---|---|---|
| மறுமுறை தேர்வெழுதும் தனித்தேர்வர் (H வகை) | மேல்நிலைத் தேர்வினை ஏற்கனவே எழுதி தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் பெயர் பதிவு செய்யப்பட்டு தேர்வு எழுதாதவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களில் 2005–06ல் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத் திட்டத்தில் மட்டுமே தேர்வெழுத விண்ணப்பிக்க வேண்டும்.<br><br>பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு, எழுத்துத்தேர்வு அனைத்திற்கும் வருகை தராதவர்கள், தாம் பயின்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து மேல்நிலைக் கல்வியின்போது போதிய வருகை நாட்கள் பெற்றிருந்தார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணைக்க வேண்டும். | தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/–<br>இதர கட்டணம் ரூ.35/–<br><br>உதாரணம்<br>ஒரு பாடம் ரூ.50+35=85/–<br><br>இரு பாடங்கள் ரூ.100+35=135/– |
| நேரடித் தனித்தேர்வர்கள் (HP வகை) | இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் (11ஆம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி.,) பொதுத் தேர்வில் பல்கலைக் கழகப் படிப்பிற்கு தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள்/புதிய 10ஆம் வகுப்பு மற்றும் பழைய 11ஆம் வகுப்பு இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் 35 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் இக்கல்வித் தகுதிக்கு சமமான இதர பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.<br><br>1) மனுதாரர் மேல்நிலைத் தேர்வினை இந்த மாநிலத்தில் அல்லது வேறு மாநிலத்தில் ஏற்கனவே எழுதியிருக்கக்கூடாது. | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br><br>இதர கட்டணம் ரூ.35/–<br><br>கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு கட்டணம் ரூ2/–<br><br>மொத்தம் ரூ.187/– |

| | | |
|---|---|---|
| | 2) 2013 மார்ச் முதல் தேதியன்று 16 ½ வயது (16 வருடம் 6 மாதங்கள்) நிறைவு செய்பவராய் இருத்தல் வேண்டும்.<br><br>3. இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு அல்லது அதற்குச் சமமான பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டு கால இடைவெளி இருத்தல் வேண்டும். (அதாவது மார்ச் 2013 தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் எஸ்.எஸ்.எல்.சி., அல்லது அதற்கு இணையான தேர்வினை ஜூன் 2011 அல்லது அதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்).<br><br>4. வெளி மாநிலத்தில் படிப்பை முடித்து இத்தேர்விற்கு விண்ணப்பிப்பவர்கள், அம்மாநில கல்வி வாரியத்தால் வழங்கப்பட்ட இடப்பெயர்வு சான்றிதழின் (Migration Certificate) அசலையும் விண்ணப்ப மனுவுடன் இணைக்க வேண்டும்.<br><br>5. மேல்நிலைத் தேர்வு பொதுக் கல்வி பாடத் தொகுப்பின்கீழ் பகுதி I மற்றும் பகுதி II மொழிப்பாடங்களுடன் ஐந்து பாடத்தொகுப்புகளில் (செய்முறை அல்லாத பாடங்கள்) ஏதேனுமொன்றில் நான்கு பாடங்களும் சேர்த்து மொத்தம் ஆறு பாடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். (வரிசை எண். II - னைக் காண்க.)<br><br>இத்துறையால் தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் மட்டுமே வழங்கப்படும். மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கப்பட மாட்டாது. | |

மொழிப் பாடங்களில் பழைய பாடத்திட்டத்தின்படி (மார்ச் 97–க்கு முன்பாக) தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், அப்பாடங்களில் மீண்டும் தற்போது தேர்வெழுத விண்ணப்பிக்கும் (H வகை) தேர்வர்களும், முதன்முறையாக விண்ணப்பிக்கும் தேர்வர்களும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வுக்காக ரூ.2/– கூடுதலாக செலுத்த வேண்டும்.

**<u>ஆன்–லைனில் விண்ணப்பிப்பதற்கான தேதிகள்</u>**

தனித்தேர்வர்கள் www.dge.tn.nic.in என்ற இணையதளத்தில் 07.01.2013 (திங்கட்கிழமை ) முதல் 18.01.2013 (வெள்ளிக்கிழமை) வரை தங்கள் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.

**ஆன்–லைனில் பதிவு செய்தலும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தலும்**

| | |
|---|---|
| 1. | தனித்தேர்வர்கள் ஆன்–லைனில் தமது புகைப்படத்தை அப்லோடு செய்து, முழுமையாக விவரங்களைப் பூர்த்தி செய்தபிறகு, அவர்களுக்கு ப்ரத்யேகமான விண்ணப்ப எண் (Application Number) வழங்கப்படும். விண்ணப்ப எண்ணை கண்டிப்பாக குறித்துக் கொள்ளவேண்டும். |
| 2. | இந்த விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே அவர்கள் புகைப்படத்துடன் பதிவு செய்த விவரங்களுடன்கூடிய விண்ணப்பத்தினையும், தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய சலானையும் பதிவிறக்கம் செய்துகொள்ள இயலும். |
| 3.. | இந்த விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே எந்தவொரு சந்தேகங்களுக்கும் தேர்வு துறையிடம் முறையீடு செய்யவோ அல்லது தேர்வுக்கூட நுழைவுச் சீட்டைப் பெறவோ முடியும். எனவே, பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை ஒளிநகல் (Photocopy) எடுத்து தனித்தேர்வர்கள் தங்கள்வசம் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். |
| 4. | தனித்தேர்வர்கள் பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தில் புகைப்படத்தினை ஒட்டி, அப்புகைப்படத்தில் கடைசியாகப் பயின்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடம் சான்றொப்பம் பெறுதல் வேண்டும். |
| 5. | நேரடித் தனித்தேர்வராக (HP வகை) விண்ணப்பிப்பவர்கள் பத்தாம் வகுப்புத் தேர்வினை பள்ளியில் பயிலாமல் நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றிருப்பின், ஆன்–லைன் விண்ணப்பத்தில் அவர்கள் இறுதியாகப் பயின்ற பள்ளித் தலைமையாசிரியர்கள் அல்லது அன்னாரின் இருப்பிட முகவரிக்கு அருகிலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியரிடம் புகைப்படத்தில் சான்றொப்பம் பெற வேண்டும். |

உரிய தலைமையாசிரியரிடம் சான்றொப்பம் பெறாமல் அரசிதழ் பதிவு பெற்ற பிற அலுவலர்களின் சான்றொப்பம் பெற்று அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**ஆன்–லைனில் பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை** நேரடியாக **சமர்ப்பிக்க வேண்டிய அலுவலகங்கள் பற்றிய விவரம் மற்றும் இறுதி தேதி**

**திருநெல்வேலி, மதுரை, கோயமுத்தூர், திருச்சி, கடலூர், வேலூர் மற்றும் சென்னை** ஆகிய வருவாய் மாவட்டங்களிலிருந்து விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள், விண்ணப்பங்களை அவர்தம் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குநர் அலுவலகங்களில் மட்டுமே நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

**இதர மாவட்டங்களிலிருந்து** விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள், அவர்தம் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் மட்டுமே **நேரடியாக** சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் **07.01.2013** (திங்கட்கிழமை) முதல் **19.01.2013** (சனிக்கிழமை) (இடையிலுள்ள அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) மாலை **5.45–க்குள்** நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

தபால்மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**முக்கிய அறிவுரைகள்**

**I. நேரடித் தனித்தேர்வர்கள்**

முதன்முதலாக மேல்நிலைத் தேர்வெழுதும் "HP" வகை நேரடித் தனித்தேர்வர்கள், பகுதி I மற்றும் II மொழிப்பாடங்களுடன் பின்வரும் ஐந்து பாடத் தொகுப்புகளில் ஏதேனுமொன்றில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

| பாடத்தொகுப்பு எண் | பகுதி 3 – பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 304 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 305 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 306 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | இந்தியக் கலாச்சாரம் |
| 307 * | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 308 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் |

* வ.எண்.V–(4) ஐக் காண்க.

**II.தேர்வு மையம் தேர்ந்தெடுத்தல்**

ஆன்லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்யும்போது, அதில் காண்பிக்கப்படும் தேர்வு நடைபெறும் இடங்களின் பட்டியலிலிருந்து ஏதேனும் ஓர் இடத்தினைத் தெரிவுசெய்து, "Place of Examination" என்ற இடத்தில் பதிவு செய்ய வேண்டும்.

**III.தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை**

பதிவிறக்கம் செய்த சலான் மூலம் மட்டுமே கோர் பாங்கிங்" சேவை உள்ள **State Bank of India** வங்கி கிளையில் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய இறுதி தேதி **19.01.2013 ( சனிக்கிழமை).** (செலுத்த வேண்டிய நேரம் வங்கியின் விதிகளுக்குட்பட்டது)

**IV.செய்முறை கலந்த பாடங்களில் தேர்ச்சி பெற தனித்தனியே குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் குறித்த விளக்கம்.**

செய்முறை கலந்த பாடங்களில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், மீண்டும் தேர்வெழுதுவோரைப் பொறுத்தவரை, தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் **150–க்கு 30** மதிப்பெண்களும், செய்முறைத் தேர்வில் **50–க்கு 40** மதிப்பெண்களும் பெறவேண்டும்.

தேர்ச்சி விதிகளின்படி, செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. ஆனால் செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் அப்பாடத்தில் தேர்ச்சி பெறும்பொருட்டு, கண்டிப்பாக செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வு ஆகிய இரண்டிற்கும் வருகைபுரிய வேண்டும்.

மேலும், மார்ச் 2001 மேல்நிலைத் தேர்விற்கு முன்னதாக தேர்வெழுதியவர்கள் தாங்கள் செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண் விவரம் குறித்த சான்றினை தாங்கள் படித்த மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இச்சான்றினை படித்த பள்ளியில் பெறமுடியாமற்போனால், கண்டிப்பாக செய்முறை தேர்விற்கு வருகைபுரிய வேண்டும்.

## V.கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு

பகுதி I மற்றும் பகுதி II மொழிப்பாடங்களில் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு கீழ்க்குறிப்பிட்டுள்ள வகைத் தேர்வர்களுக்கு நடத்தப்படும்.

1. அனைத்து நேரடித் தனித்தேர்வர்கள் (HP Category)

2. மேல்நிலைத் தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (மார்ச் 1997 மேல்நிலைத் தேர்வுக்கு முன்னர்) எழுதி மொழிப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல், தற்போதை பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள்.

3. இத்தேர்வர்களுக்கு மொழிப் பாடங்களின் (Part I & Part II) இரண்டாம் தாளில் 20 மதிப்பெண்களுக்கு கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும். கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு குறித்த விவரங்களை, தனித்தேர்வர்கள், எழுத்துத் தேர்வு மையத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

4. <u>சிறப்பு மொழி(தமிழ்) – கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு</u>
   சிறப்பு மொழி(தமிழ்) பாடத்திற்கும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும். கருத்தியல் தேர்வு 180 மதிப்பெண்கள் மற்றும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு–20 மதிப்பெண்கள்).

எனவே, (அ) சிறப்பு மொழி(தமிழ்) பாடத்தில் செப்டம்பர் 2006 தேர்வு பருவம் வரை தேர்ச்சி பெறாது தற்போது தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் மற்றும் (ஆ) பாடத்தொகுப்பு எண் 307–ன்கீழ் சிறப்பு மொழி (தமிழ்) எழுதும் நேரடித் தனித் தேர்வர்களும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு செய்ய வேண்டும்.

5. இவ்வாறு தேர்வு மையங்களில் நடத்தப்படும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடுத்து வரும் மொழிப்பாட தேர்வுகளுக்கும் எடுத்துக் கொள்ளப்படும். எந்தச் சூழ்நிலையிலும் இத்தேர்வை மீண்டும் செய்வதற்கு வழிவகை இல்லை.

6. தேர்வர்கள் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வுக்கு தேர்வு மையத் தலைமைக் கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட தேதியில் வருகை புரிய வேண்டும். தவறினால் கேட்டல்/பேசுதல் தேர்வுக்கான 20 மதிப்பெண்களை இழக்க நேரிடும். கருத்தியல் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மட்டுமே பதியப்பட்டு மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும்.

**VI.வெளி மாநிலத் தேர்வர்கள்**

வெளி மாநிலத்தில் படிப்பை முடித்து, மேல்நிலைத் தேர்வுக்கு நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்கும் தேர்வர்கள், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிழ்களுடன் தாங்கள் பயின்ற மாநிலத்திலிருந்து பெற்ற இடப்பெயர்வு சான்றிதழையும்(Migration Certificate) இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வெளி மாநிலத் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட மேல்நிலைத் தேர்வு எழுதியவர்கள், நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்க இயலாது.

**VII. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

| | **'H' வகையினர்** | | **'HP'வகையினர்** |
|---|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணம் செலுத்தியமைக்கான **State Bank of India** வங்கி சலான். | 1. | தேர்வுக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணம் செலுத்தியமைக்கான **State Bank of India** வங்கி சலான். |
| 2. | சான்றொப்பமிடப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் ஒளிநகல் (இதுவரை எழுதிய மேல்நிலைத் தேர்வுகளுக்கானது). | 2. | பத்தாம் வகுப்பு அல்லது சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ். |
| 3. | பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு தேர்வெழுதாதவர்ளுக்கு மட்டும்). | 3. | பள்ளி மாறுதல் சான்றிதழின் அசல் |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | இடப்பெயர்வு சான்றிதழ் அசல் (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**சென்னை 600 006** **ஒம்/–**
**நாள் : 27.12. 2012** **இயக்குநர்**